பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

19 10 2025 6.30

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கு கூடுதலாக 10 ஆயிரத்து 650 இடங்களை ஏற்படுத்த தேசிய மருத்துவ ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.

2. வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று சென்னையில் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

3. தேனியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனடியாக நிவாரணப் பணிகளை திமுக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

4. தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளது.

5. உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் தன்வீ ஷர்மா வெள்ளிப் பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ----

<<<<>>>>

இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கு புதிதாக 10 ஆயிரத்து 650 இடங்களை ஏற்படுத்துவதற்கு தேசிய மருத்துவ ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் சுதந்திர தின உரையில் அடுத்த 5 ஆண்டுகளில் 75 ஆயிரம் மருத்துவப் படிப்புக்கான இடங்கள் ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில் இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தேசிய மருத்துவ ஆணையத்தின் தலைவர் டாக்டர் Abhijat Sheth, 41 அரசு மற்றும் 129 தனியார் கல்லூரிகளில் இந்த இடங்கள் ஏற்படுத்தப்படுவதாகத் தெரிவித்தார்.

41 புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்குவதற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதன் மூலம் நாட்டில் செயல்படும் மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை 816ஆக அதிகரித்துள்ளதாகவும் டாக்டர் Abhijat Sheth கூறினார்.

<<<<>>>>

விண்வெளியில் இந்தியா சார்பில் 52 டன் எடைகொண்ட ஆய்வு மையம் அமைக்கப்பட உள்ளதாக இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன் கூறியுள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம் சாமித்தோப்பு ஐயா வைகுண்டசாமி கோவிலில் தரிசனம் செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

<<<<>>>>

வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று சென்னையில் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

மாநில அவசர கால செயல்பாட்டு மையத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

பல்வேறு மாவட்டங்களின் ஆட்சியர்களும் காணொலி வாயிலாக இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

<<<<>>>>

தேனியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய இழப்பீட்டினை திமுக அரசு வழங்க வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த மாவட்டத்தில் பெய்த தொடர் மழை காரணமாக இதுவரை இல்லாத அளவிற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் திமுக அரசு அலட்சியமாக இருந்ததே இந்த பாதிப்புக்கு காரணம் என்றும் அவர் கூறியுள்ளார்.

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் உடனடியாக தேனிக்கு விரைந்து சென்று மீட்பு பணியை விரைவுபடுத்த வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் கோரியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திருமதி அமுதா கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வங்கக் கடலில் நாளை மறுநாள் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக தெரிவித்தார்.

கோவை, நீலகிரி, ஈரோடு, திருப்பூர், தேனி, தென்காசி, விருதுநகர், தூத்துக்குடி, ராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் திருமதி அமுதா கூறினார்.

இதற்கிடையே மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது.

கோவை மாவட்டம் ஆனைமலையை அடுத்த பாலாற்றின் மையப் பகுதியில் அமைந்துள்ள ஆஞ்சநேயர் கோவிலில் சிக்கிய காவலாளிகள் இருவரை தீயணைப்புத் துறையினர் நீண்டநேர போராட்டத்திற்குப் பின்னர் பாதுகாப்பாக மீட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

திருப்பூர் மாவட்டத்தில் பெய்த கனமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

உதவிப் பேராசிரியர் நியமனங்களுக்கான நிபந்தனைகளை தமிழக அரசு களைய வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆசிரியர் தேர்வு வார்யம் சார்பில் வெளியிடப்பட்ட உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்கான அறிவிக்கையில் இடம்பெற்றுள்ள விதிமுறைகள் நடைமுறைக்கு ஏற்புடையதாக இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் தமிழக அரசு உடனடியாக தலையிட்டு அவற்றை மாற்றியமைக்க வேண்டும் என்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோரியுள்ளது.

<<<<>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

கரூர் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் தற்காலிக கடைகள் அமைத்த சிறு வியாபாரிகள் 40க்கும் மேற்பட்டோர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

-------------

துபாயில் இருந்து தூத்துக்குடி துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்ட கண்டெய்னரில் பேரிச்சம்பழத்திற்கு இடையே வைக்கப்பட்டிருந்த 3 கோடி ரூபாய் மதிப்பிலான சிகரெட்டுகளை வருவாய் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

-------------

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் - உதகை இடையேயான மலைரயில் சேவை மண் சரிவு காரணமாக இன்று ரத்து செய்யப்பட்டது.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் தன்வீ ஷர்மா வெள்ளிப் பதக்கம் வென்றார்.

குவஹாத்தியில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

---------------

ஆசிய பாரா டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா 2 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

சீனாவின் Beijing-கில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் Jehan Madan-னும், மகளிர் இரட்டையர் பிரிவில் Sonalben - Rajalakshmi இணையும் வெண்கலப் பதக்கம் வென்றது.

இப்போட்டியில் இந்தியா 5 வெண்கலப் பதக்கங்களைக் கைப்பற்றியது.

---------------

ஆசிய படகு சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், 3 வெள்ளி, 2 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

வியட்நாமில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் Balraj Panwar தங்கப் பதக்கம் வென்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவுகளில் Salman Khan - Jaspindar Singh இணை வெள்ளிப் பதக்கத்தையும், Nitin Deol - Parvinder Singh இணை வெண்கலப் பதக்கம் வென்றது.

ஆடவர் குழுப் பிரிவில் 2 வெள்ளிப் பதக்கங்களும், மகளிர் குழுப் பிரிவில் ஒரு வெண்கலப் பதக்கமும் இந்தியாவிற்கு கிடைத்தது.

இப்போட்டியில் இந்தியா 3 தங்கம், 5 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

<<<<The End>>>>